Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 24/2023**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | பேக்கரி கடை |
| பெயர் | - | நசீர் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஹாலித் | சமயம் | - | முஸ்லீம் |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர் நகர், வால்பாறை | வயது | - | 44 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் வால்பாறை எம்.ஜி.ஆர் நகரில் வசித்து பேக்கரிகடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06.02.2023-அன்று இரவு 07.00 மணிக்கு நான் வேலை முடித்து வீட்டுக்கு போய்க்கொண்டிருந்தேன். அப்போது வீட்டுப்பக்கம் ஒரே சத்தமாக இருந்தது.

2. மூன்று பெண்மணிகள் வீட்டுக்குபக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி கையில் கல்லை வைத்துக்கொண்டு சத்தம் போட்டுக்கொண்டு சபரியின் சட்டையை ஆட்டிக்கொண்டிருந்தார். போலீசார் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகும்.**

தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.